# பேதுருவின் நிருபங்களில் இயேசு

**மனன வசனம்**

**நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1பேதுரு 2:24.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 1:18,19;**

**கொலோ 1:13,14;**

**ஏசா 53:1-12;**

**யோவான் 11:25;**

**சங் 18:50;**

**2பேதுரு 1:11.**

மே 13 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

1பேதுரு நிருபம் பற்றி இதுவரையிலும் நாம் படித்ததிலிருந்து ஒன்றை நாம் புரிந்திருப்போம். பேதுரு எழுதுகிற பின்னணி என்னவாக இருந்தாலும், அவர் பேசுகிற பிரச்சனை என்னவாக இருந்தாலும், அவர் மையப்படுத்துவதெல்லாம் இயேசுவைத்தான். தம் எழுத்துகள் முழுவதிலும் இயேசுவையே பிரதிபலிக்கிறார்; நிருபம் முழுவதிலும் நெய்யப்பட்ட பொன்னிழையாக இயேசு இருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் 'அப்போஸ்தலன்' (அனுப்பப்பட்டவன்)என்றுமுதல்வரியில்ஆரம்பிப்பதிலிருந்து, 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக' என்று இறுதியாக அவர் சொல்வது வரைக்கும் இயேசுதான் மையக்கருத்தாக இருக்கிறார். 1பேதுரு 5:14. நம்முடைய பலியாக கிறிஸ்து மரித்ததுபற்றி இந்த நிருபத்தில் கூறுகிறார். இயேசு அனுபவித்த மாபெரும் உபத்திரவம்பற்றிச் சொல்லிவிட்டு, அந்தப் பாடுகளில் அவர் நமக்கு ஒரு முன்மாதிரியை வைத்துப்போனதை விளக்குகிறார். இயேசுவின் உயிர்த்தெழுதல்பற்றியும் அதால் நமக்குண்டான நன்மையையும் வலியுறுத்துகிறார். மேலும், இயேசுவை மேசியாவாக, 'அபிஷேகம்பண்ணப்பட்டவராக' மட்டுமல்ல, தெய்வீக மேசியவாகவும் எடுத்துக்கூறுகிறார். அதாவது, இயேசுவின் தெய்வீகத்தன்மைகுறித்த அதிக ஆதாரத்தை 1பேதுருவில் நாம் காணமுடிகிறது. அவர் தேவன்; மனித மாம்சத்தில் வந்தார்; நாம் நித்திய வாழ்வின் வாக்குறுதியையும் நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ளும்படி நமக்காக வாழ்ந்து மரித்தார்.

இந்த வாரம் மீண்டும் 1பேதுரு நிருபத்தை ஆராயப்போகிறோம்; இயேசுவைப்பற்றி அதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள விஷயங்களை ஆராய்வோம்.

*2017, மே 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

விழுந்துபோன மனித இனத்தை இரட்சிக்க தேவன் செய்துவரும் கிரியை தான் வேதாகமத்திலேயே பிரதான கருத்தாக உள்ளது. ஆதியாகமத்தில் ஆதாம்-ஏவாளின் விழுகையில் ஆரம்பித்து, வெளிப்படுத்தலில் பாபிலோனின் விழுகை வரைக்கும் 'தொலைந்துபோனதை' இரட்சிக்க தேவன் செய்துவருகிற கிரியையைத் தான் ஏதாவது ஒரு விதத்தில் வேதாகமம் வெளிப்படுத்துகிறது. லூக் 19:10. பேதுரு வின் நிருபங்களிலும் இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***மீட்கப்படுதல் என்றால் என்ன? 1பேதுரு 1:18,19; கொலோ 1:13,14. இரத்தத்திற்கும் மீட்பிற்கும் உள்ள தொடர்பு என்ன?***

இயேசு நமக்காக மரித்ததின் முக்கியத்துவத்தை 1பேதுரு 1:18,19 இவ்வாறு விவரிக்கிறது: 'நீங்கள் அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.' இரண்டு முக்கிய உருவகங்கள் இந்த வசனங்களில் சொல்லப்படுகின்றன:

**1 மீட்பு   2 மிருகப்பலி**

மீட்புபற்றி பல்வேறுவிதங்களில் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. உதாரணமாக, கழுதையின் தலையீற்றும் (அதைப் பலியிடமுடியாது), பிள்ளைகளில் முதல்பேறானவர்களும் ஓர் ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்ளப்பட்டார்கள். யாத் 34:19,20. வறுமையின் நிமித்தம் விற்றவற்றை பணம்கொடுத்து மீண்டும் வாங்கலாம் (மீட்கலாம்). லேவி 25:25-27. முக்கியமாக, ஓர் அடிமையை மீட்டுக்கொள்ளமுடியும். லேவி 25:47-49. பேதுரு தன் வாசகர்களுக்கு எழுதும்போது, விசுவாசிகள் தங்கள் 'முன்னோர்களால் பாரம்பரியமாய் அநுசரித்துவந்த வீணான நடத்தையால்' மீட்கப்படாமல், 'குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால்' மீட்கப்பட்டதாகக் கூறுகிறார். 1பேதுரு 1:18,19. ஆட்டுக்குட்டி உருவகமாகச் சொல்லப்படுவது, மிருகப்பலியைச் சுட்டிக்காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செய்யப்பட்ட மிருகப்பலிக்கு கிறிஸ்துவின் மரணத்தை பேதுரு ஒப்பிடுகிறார். ஒரு பாவி, பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டியை ஆசரிப்புக்கூடாரத்திற்குக் கொண்டுவரவேண்டும். பிறகு அந்தப் பாவி, அந்த மிருகத்தின் தலையில் தன் கைகளை வைக்கவேண்டும். லேவி 4:32,33. அந்த மிருகம் கொல்லப்பட்டு, அதன் இரத்தத்தில் கொஞ்சம் பலிபீடத்தில் தெளிக்கப்படும்; மற்ற இரத்தத்தை எல்லாம் அதன் அடியில் ஊற்றிவிடுவார்கள். லேவி 4:34. அந்தப் பலிமிருகத்தின் மரணமானது, அதைப் பலியிட்டவனுக்கு இவ்வாறு 'பாவ நிவாரணம்' செய்தது. லேவி 4:35. நமக்காக இயேசு மரித்தாரென்றும், நாம் அடையவேண்டிய அழிவிலிருந்தும், நம் முந்தைய வாழ்விலிருந்தும் அவருடைய மரணம் நம்மை மீட்டது என்றும் பேதுரு கூறுகிறார்.

நமக்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவரில்தான் நம் இரட்சிப்பிற்கான நம்பிக்கையே அடங்கியிருக்கிறது; நாம் முற்றிலும் தேவனையே சார்ந்திருக்கவேண்டியதின் அவசியம்பற்றி இது நமக்குப் போதிப்பது என்ன?

'கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள்'பற்றி கிறிஸ்தவர்கள் அதிகம் பேசுவதுண்டு. இயேசு வெற்றிவேந்தராக எருசலேமுக்குள் பிரவேசித்ததுமுதல், அவருடைய வாழ்வின் இறுதிக்கட்டங்கள் முழுவதும் உண்டான பாடுகள்தாம் பொதுவாக 'கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள்' என்று சொல்லப்படுகின்றன. அந்தக் கடைசி நாட்களில் கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகள்பற்றி பேதுருவும் பேசியிருக்கிறார்.

***இயேசு நமக்காக அனுபவித்த பாடுகள் பற்றி 1பேதுரு 2:21-25; ஏசாயா 53:1-12 வசனங்கள் சொல்வது என்ன?***

---

இயேசுவின் பாடுகளுக்கு ஒரு விசேஷித்த முக்கியத்துவம் இருக்கிறது. 'நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்.' 1பேதுரு 2:24. சிலுவையை ஆங்கில வேதாகமம் மரம் என்று சொல்லுகிறது; அதுவும் சிலுவையையே குறிக்கிறது. அப் 5:30. பாவம் மரணத்தைக் கொண்டுவருகிறது. ரோமர் 5:12. பாவிகளாக, நாம் மரித்துதான் ஆகவேண்டும். ஆனாலும், பரிபூரணரான இயேசு நமக்காக மரித்தார்;'அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை' 1பேதுரு 2:22. அவர் நமக்காக மரித்ததுதான் இரட்சிப்பின் திட்டம்.

***ஏசா 53:1-12 வசனங்களை மீண்டும் வாசியுங்கள். நமக்கான இரட்சிப்பின் திட்டத்தை முன்னிட்டே இயேசு பாடனுபவித்தார் என்று அவ்வசனங்கள் எவ்வாறு சொல்கின்றன? தேவனுடைய குணம்பற்றியும் அவ்வசனங்கள் சொல்வது என்ன?***

---

'மிகக்கடுமையான சோதனைகளால் இயேசுவின் இருதயத்தை சாத்தான் சோர்ந்துபோகச் செய்தான். கல்லறையின் வாசல்களையும் தாண்டி இரட்சகரால் பார்க்கமுடியவில்லை. அவர் கல்லறையிலிருந்து வெற்றியுடன் எழும்புவது பற்றி நம்பிக்கை கொடுக்கப்படவும் இல்லை; அவருடைய பலியை பிதா ஏற்றுக்கொள்வது பற்றி அவரிடம் சொல்லப்படவும் இல்லை. தேவன் பாவத்தை மிகவும் வெறுத்ததால், தாங்கள் நித்தியமாகப் பிரியக்கூடுமோவென்று அவர் பயந்தார். பாவ மனிதர்களுக்காக மன்றாடும் கிருபை நிறுத்தப்படும்போது பாவிக்கு உண்டாவது போன்ற வியாகுலத்தை கிறிஸ்து அனுபவித்தார். மனிதனின் பதிலீடாக, அவர் மேல் பிதாவின் கோபத்தைக் கொண்டுவந்த பாவ உணர்வுதான், கசப்பான பாத்திரத்தில் அவரைப் பருகச்செய்தது; தேவகுமாரனின் உள்ளத்தை உடைத்தது.' *EGW, DA, p 753.*

---

கிறிஸ்து நமக்காக அனுபவித்த பாடுகளை நினைத்து நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? 1பேதுரு 2:21 சொல்வதுபோல, அவருடைய முன்மாதிரியை நாம் எவ்வாறு பின்பற்றவேண்டும்?

## இயேசுவின் உயிர்த்தெழுதல்

***1பேதுரு 1:3,4,21; 3:21; யோவான் 11:25; பிலி 3:10,11; வெளி 20:6 ஆகிய வசனங்கள் சுட்டிக்காட்டும் மிகப்பெரிய நம்பிக்கை என்ன? அது ஏன் நமக்கு விலையேறப்பெற்றது?***

இயேசுவை விசுவாசித்ததின் நிமித்தம் உபத்திரவங்களுக்கு ஆளாகி வந்தவர்களுக்கு பேதுருவின் முதலாம் நிருபம் எழுதப்பட்டதாகப் பார்த்தோம். அதனால்தான், எப்படிப்பட்ட நம்பிக்கை காத்திருக்கிறது என்று தன் நிருபத்தின் ஆரம்பத்திலேயே அவர்களுக்குச் சுட்டிக்காட்டி பேதுரு எழுதுகிறார். ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சார்ந்திருக்கிறது; எனவே, அது உயிருள்ள ஒரு நம்பிக்கையாகும். 1பேதுரு 1:3. இயேசுவின் உயிர்த்தெழுதலானது, அழியாத அல்லது வாடாத ஒரு சுதந்தரம் பரலோகத்தில் காத்திருப்பதை கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்து வாழும்படி செய்திருக்கிறது. 1பேதுரு 1:4. அதாவது, சூழ்நிலைகள் எந்த அளவுக்கு மோசமாகிக் கொண்டே இருந்தாலும், இறுதியில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் சுதந்தரம்பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும்.

நாமும் உயிர்த்தெழப்படுவோம் என்பதற்கு இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் அச்சாரமாக இருக்கிறது. 1கொரி 15:20,21. 'கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்' என்று பவுல் சொல்கிறார். 1கொரி 15:17. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததால், மரணத்தை ஜெயிக்கிற வல்லமை தம்மிடம் இருப்பதை அவர் நிரூபித்திருக்கிறார். எனவே, வரலாற்று நிகழ்வான கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான் கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையாக இருக்கிறது. கடைசிக் காலத்தில் வாழ்கிற நமக்கும் அவருடைய உயிர்த்தெழுதல்தான் அடிப்படையாக இருக்கிறது.

அந்த நம்பிக்கையும் வாக்குறுதியும் இல்லாவிட்டால் நம்முடைய நிலைமை என்னவாகும்? கிறிஸ்து நமக்காக நிறைவேற்றிய அனைத்திற்கும் உயிர்த்தெழுதலின் வாக்குறுதிதான் நிறைவேறுதலாக இருக்கிறது. அந்த நம்பிக்கைமாத்திரம் இல்லாவிட்டால் நம் நிலை என்னவாகும்? மற்ற கிறிஸ்தவர்கள்போல நாம் நம்புவது இல்லையே; அதாவது, கல்லறையில் சுயநினைவின்றி தூங்குகிற தூக்கம்தான் மரணம் என்று நாம் நம்புகிறோமே?

'கிறிஸ்தவனைப் பொருத்தவரையில், மரணம் என்பது தூக்கம்; அமைதியிலும் அந்தகாரத்திலும் செலவிடும் ஒரு கண நேரம். ஜீவனானது கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைக்கப்பட்டிருக்கிறது; 'நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.' யோவான் 8:51,52; கொலோ 3:4. மரித்த நீதிமான்கள் அனைவரும் அவருடைய இரண்டாம் வருகையில் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள்; மகிமையான, அழிவில்லாத வாழ்க்கையைப் பெற எழும்புவார்கள்.' - *EGW, DA, p 787.*

இறுதியில் மரணத்தின் கையே ஓங்கியுள்ளதுபற்றி யோசியுங்கள். அது மிகவும் கொடுமையானது, ஜீரணிக்கமுடியாதது, உண்மையானது. அப்படியானால், நம்முடைய விசுவாசத்திற்கும், நாம் நம்பியிருக்கிற ஒவ்வொரு நம்பிக்கைக்கும் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தம் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது?

தாம் யாரென்று இயேசு கேட்டதற்கு, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்று பேதுரு பதிலளித்தார். மத் 16:16. இயேசுவின் பூலோக ஊழியக்காலத்தில் முக்கியத் திருப்புமுனையான சம்பவங்களில் அதுவும் ஒன்று. கிறிஸ்து என்றால், 'அபிஷேகம்பண்ணப்பட்டவர்' என்று அர்த்தம். எபிரெயத்தில் அதை 'மஷையாக்' என்பார்கள். 'அபிஷேகிப்பதற்கு' என்று பொருள்படும் ஒரு மூலவார்த்தையிலிருந்து வந்தது அது; பல்வேறு பின்னணிகளில் அந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஏசா 45:1ல், அஞ்ஞான மன்னனான கோரேஸைச் சுட்டிக்காட்டவும் பயன்பட்டுள்ளது. எனவே, கிறிஸ்து என்று இயேசுவை பேதுரு அழைத்தபோது, எபிரெய வேதாகமத்தின் பிரத்தியேகமான ஒரு வார்த்தையை உபயோகிக்கிறார்.

***மேசியா அல்லது அபிஷேகிக்கப்பட்டவர் என்று பொருள்படும் வார்த்தை வருகிற பழைய ஏற்பாட்டு வசனங்களை கீழே வாசியுங்கள். அந்த வார்த்தை சொல்லப்படும் பின்னணி அதன் அர்த்தம் பற்றிச் சொல்வது என்ன? என்ன அர்த்தத்தில் இயேசுவை மேசியாவென பேதுரு அழைத்திருப்பார்?***

*சங் 2:2* ____________________

*சங் 18:50* ____________________

*தானி 9:25* ____________________

*1சாமு 24:6* ____________________

*ஏசா 45:1* ____________________

தேவ ஏவுதலால் இயேசுவை மேசியா என்று பேதுரு அழைத்தபோதிலும், அதன் முழு அர்த்தத்தையும் அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மத் 16:16,17. மேசியா யார்? அவர் நிறைவேற்றியிருந்தது என்ன? முக்கியமாக அதை எவ்வாறு நிறைவேற்றயிருந்தார்? இவற்றை அவர் அறிந்திருக்கவில்லை.

அத்தகைய அறியாமையில் இருந்தது பேதுருமாத்திரமல்ல. மேசியாவைப் பற்றி இஸ்ரவேலில் பல்வேறு கருத்துகள் நிலவின. மேசியா அல்லது அபிஷேகிக்கப்பட்டவர் என்கிற வார்த்தை பயன்படுத்தப்படும் மேலுள்ள வசனங்கள்கூட மேசியா என்பதன் முழு அர்த்தத்தை எடுத்துக்காட்டவில்லை.

மேசியாவைக் குறித்து நிலவிய எதிர்பார்ப்பை அறிய யோவான் 7:40 சற்று உதவுகிறது; அதாவது, அவர் பெத்லகேம் ஊரில், தாவீதின் சந்ததியில் பிறப்பார். ஏசா 11:1-16; மீகா 5:2. அந்தளவுக்கு அது சரிதான். எனவே, தாவீதின் வம்சத்தில் வருகிற மேசியா, தாவீதைப் போல யூதர்களின் எதிரிகளைத் தோற்கடிப்பார் என்றும் நம்பினார்கள். ஆனால், ரோமர்களால் சிலுவையில் அறையப்படுகிற ஒரு மேசியாவை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை.

ஆனாலும், தன் நிருபங்களை எழுதின சமயத்தில், இயேசுவே மேசியா என்பதையும் மனித இனத்திற்காக அவர் நிறைவேற்றயிருந்ததையும் பேதுரு நன்கு அறிந்திருந்திருப்பார். (பேதுரு தன் நிருபங்களில் 15 முறை இயேசு கிறிஸ்து என்று அழைக்கிறார்.)

## இயேசு, தேவனாகிய மேசியா

இயேசுவானவர் மேசியா மாத்திரமல்ல, கர்த்தரும்கூட என்பதை பேதுரு அறிந்திருந்தார். தன் நிருபங்களை அவர் எழுதிய சமயத்தில், தேவன்தாம் மேசியா என்கிற முடிவுக்கு முற்றிலுமாக வந்திருந்தார். 'கர்த்தர்' எனும் வார்த்தை அஞ்ஞான உலகிலும் பயன்பட்ட ஒன்று; ஆனால், தேவன் என்றும் அதற்கு அர்த்தம் உண்டு. மேசியாவாகிய-கிறிஸ்துவாகிய கர்த்தர் தேவனாக இருக்கிறாரரென 1பேதுரு 1:3; 2பேதுரு 1:8,13,16 வசனங்களில் பேதுரு குறிப்பிடுகிறார்.

இயேசுவுக்கும் தேவனுக்கும் இடையேயான உறவை, மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள்போலவே பேதுருவும் பிதாவும் குமாரனும் என்றே குறிப்பிடுகிறார். உதாரணமாக, 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.' 1 பேதுரு 1:3; ஒப்பிடவும்: 2பேதுரு 1:17. நேசகுமாரன் என்று இயேசு அழைக்கப்படுகிறார். 2பேதுரு 1:17. பிதாவோடு இயேசுவுக்குள்ள விசேஷித்த உறவுதான், கர்த்தர் என்கிற அவரது அதிகாரத்தையும், அவரது பரலோக அந்தஸ்தையும் நாம் புரிந்து கொள்ளும்படிச் செய்கின்றன.

***இயேசுவின் தெய்வீகதன்மைபற்றி 2பேதுரு 1:1; யோவான் 1:1; யோவான் 20:28 ஆகிய வசனங்கள் சொல்வது என்ன?***

'நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து' என்று 2பேதுரு 1:1 கூறுகிறது. கிரேக்க வேதாகமத்தில், தேவன் மற்றும் இரட்சகர் என்கிற இரு வார்த்தைகளும் இயேசுவைக் குறிக்கும் விதத்தில்தான் சொல்லப்பட்டுள்ளன. 'தேவனும் இரட்சகரும்' என்றுதான் தமிழ் வேதாகமத்திலும் உள்ளது. எனவே, இயேசுவின் தெய்வீக தன்மையை மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டும் ஒரு புதிய ஏற்பாட்டு வசனமாக 2பேதுரு 1:1 உள்ளது.

ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் இயேசுவைப் புரிந்துகொள்ள மிகவும் சிரமப்பட்டார்கள்; இறுதியில் அவர் தேவன் என்பதற்கான ஆதாரத்தை புதிய ஏற்பாட்டில் பதிய வைத்துள்ளார்கள். பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியும் தனித்தனி நபர்களென்பது, புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களைப்போலவே பேதுருவின் நிருபங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. உதாரணமாக, பிதா, குமாரன்: 1பேதுரு 1:3; 2பேதுரு 1:17; பரிசுத்த ஆவியானவர்: 1பேதுரு 1:12; 2பேதுரு 1:21. அதேசமயம், பரிசுத்த ஆவியானவர் போல இயேசுவும் முற்றிலும் தேவனானவர் என்றே சித்தரிக்கப்படுகிறார். தேவத்துவத்தின் மறைபொருளுக்கு மிகச்சிறந்த விளக்கத்தைக் கொடுப்பதற்கு, காலப்போக்கில்தான் சபையானது அதிக விவாதத்திற்குப்பிறகு, திரித்துவம் எனும் கொள்கையை உருவாக்கியது. செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் தங்களுடைய 28 அடிப்படைக் கோட்பாடுகளில் திரித்துவத்தையும் ஒரு கோட்பாடாகச் சேர்த்துள்ளார்கள். எனவே, இயேசுவானவர் மேசியா மாத்திரமல்ல, அவர் தேவனாகவும் இருக்கிறார் என்கிற தெளிவான விளக்கத்தை பேதுருவின் நிருபத்தில் பார்க்கிறோம்.

இயேசுவின் வாழ்வையும் மரணத்தையும் யோசியுங்கள்; அவர் ஒரு தேவன் என்பதையும் யோசியுங்கள்; நாம் எப்படிப்பட்ட ஒரு தேவனைத் தொழுதுவருகிறோம்? அவர்மேல் நாம் எவ்வளவு அன்பும் நம்பிக்கையும் வைக்கவேண்டும்?

## மேலும் படிக்க:



'மேசியா' என்கிற வார்த்தையோடு ஆரம்பிப்பதுதான் அர்த்தமுள்ளது; ஏனெனில், 'அபிஷேகிக்கப்பட்டவர்' என்று அர்த்தமுள்ள கிறிஸ்டோஸ் என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் கிறிஸ்தவம் என்கிற பெயர் வந்தது. அதற்கான எபிரெய வார்த்தைகூட, யார் தங்களை விடுவித்து, தேவ மக்களின் புதிய யுகத்தைத் துவங்கப்போகிறாரென யூதர்கள் எதிர்பார்த்தார்களோ அந்த இரட்சகரைத்தான் சுட்டிக்காட்டுகிறது. கிரேக்க எபிரெய வார்த்தைகள் இரண்டுமே 'அபிஷேகி' என்பதற்கான மூலவார்த்தையிலிருந்து உருவானவைதாம். 'கிறிஸ்து' என்று அழைப்பதால், ஒரு குறிப்பிட்ட பணிக்காக அவர் பிரித்தெடுக்கப்பட்டவர் என்று புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கருதியது புரிகிறது.

"கிறிஸ்டோஸ் என்கிற பெயர் புதிய ஏற்பாட்டில் 500 முறைக்கும்மேல் வருகிறது. மேசியத்துவம்பற்றி இயேசுவின் காலத்தில் பல்வேறு கருத்துகள் இருந்தன; ஆனால், தேவனோடு ஒரு விசேஷித்த உறவை வைத்திருப்பவர்தான் மேசியா என்கிற கருத்து முதல் நூற்றாண்டில் உருவாகியிருந்தது. தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் கடைசி நாட்களில் வருகிறவர் அவர். தேவன் தம் மக்களை விடுவிப்பதற்கு அவர் மூலமாகவே வரலாற்றில் பிரவேசிக்கயிருந்தார். 'மேசியா' என்கிற பட்டத்தை இயேசு ஏற்றுக்கொண்டார்; ஆனால், அதைப் பயன்படுத்த அவர் ஊக்குவிக்கவில்லை; அப்பெயர் அரசியல் அம்சங்களோடு கருதப்பட்டதால் அதைப் பயன்படுத்தவில்லை. தம் ஊழியப்பணிபற்றிக் கூறும்போது, எல்லாருக்கும் முன்பாக அந்தப் பெயரைப் பயன்படுத்த இயேசு விரும்பாவிட்டாலும் பேதுருவையோ (மத் 16:16,17) சமாரியப் பெண்ணையோ (யோவான் 4:25,26) அப்பெயரைப் பயன்படுத்தியதற்காகக் கடிந்துகொள்ளவில்லை. தாம் மேசியா என்பதை அவர் அறிந்திருந்தார்; தம் சீடர்களில் ஒருவருக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பதைப்பற்றிப் பேசும்போது, 'நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறீர்கள்' என்று இயேசு சொன்னதாக மாற்கு குறிப்பிடுகிறார். மாற்கு 9:41." – *12SDABC, p 165.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *இயேசு நமக்காக என்ன செய்திருப்பதாக ஏசா 53:1-12 வசனங்கள் கூறுகின்றன? இயேசு நம் பதிலீடு என்கிற கருத்து எவ்வாறு தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது? அவர் நம் பதிலீடாகவேண்டியது ஏன் அவசியம்?*
2. *மறுமை வாழ்வுகுறித்த வேத வாக்குறுதியை வைத்து மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களை வரலாறு முழுவதிலும் காணலாம். இங்கு வாழ்வது கடினம்; இயேசு வரும்போது சுகமாக வாழலாம் என்று சொல்கிறார்கள். வேதாகமத்தின் இந்தச் சத்தியம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனால், மறுமை குறித்த கிறிஸ்தவ சத்தியத்தையே அநேகர் புறக்கணிக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிற்கு உங்களுடைய பதில் என்ன?*
3. *கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைபற்றியும் தேவனுடைய குணம்பற்றி அது சொல்வது பற்றியும் கேட்கப்பட்டுள்ள வியாழக்கிழமை கேள்வியை மீண்டும் தியானியுங்கள். இயேசுவின் தெய்வதன்மையும், தேவனைப்பற்றி அது வெளிப்படுத்துவதும் எவ்வாறு நற்செய்தியாக இருக்கிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.